# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## (இந்திய அரசமைப்பு, 1950)

## [INDIAN CONSTITUTIONAL LAW]

### (THE CONSTITUTION OF INDIA, 1950)

## 1. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் மூலங்கள் மற்றும் சிறப்பியல்புகள் [SOURCES AND SALIENT FEATURES OF THE INDIAN CONSTITUTION]

(மிகவும் முக்கியம்)

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

அ. இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கான ஆதாரங்கள்

ஆ. இந்திய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள்

இ. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிறப்பியல்புகள்

ஈ. முடிவுரை

### அ. இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கான ஆதாரங்கள்: (SOURCES OF THE INDIAN CONSTITUTION)

இந்திய அரசியல் அமைப்பு சட்டமானது பல்வேறு ஆதாரங்களை பல்வேறு புலங்களிலிருந்து பெற்றுள்ளது. இது முதலில் 395 சரத்துக்களைக் கொண்டு 22 பாகங்கள் மற்றும் 9 அட்டவணைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 2003—ம் வருடத்தில் 92 வது திருத்தம் முதல் 443 சரத்துக்களைக்கொண்டு 26 பாகங்கள் மற்றும் 12 அட்டவணைகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.



**இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:**
**(The following are the sources of the Indian Constitution)**

1. இந்திய பாராளுமன்றமானது பல சட்டங்களை இயற்றியுள்ளது. தடுப்புக்காவல் சட்டம், இந்திய குடியுரிமைச் சட்டம், தலைமை தேர்தல் சட்டம் போன்றவைகள் அவற்றுள் சிலவாகும். இந்த எல்லாச் சட்டங்களும் இந்திய அரசியலமைப்பு சட்டத்துடன் உபரியாக இயற்றப்பட்ட சட்டங்களாகும்.

2. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பல்வேறு சரத்துகளை முன்னிட்டு உச்சநீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் கூடுதல் மூலங்களாகும். (உ—ம்) ஏ.கே. கோபாலன் எதிர் சென்னை வழக்கில் தனி மனித உரிமை என்பதற்கு பதவிளக்கம் தரப்பட்டது. இது மாதிரி உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அநேக தீர்ப்புகள் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு ஆதாரமாக அமைந்தது.

3. பிற நாடுகளில் உள்ள நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு ஆதாரமாக அமைந்தன. (உ—ம்) அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்புகள்போன்றவைகள்.

4. அரசியலமைப்பு சட்டநிபுணர்களாகிய பல்கிவாலா ஹெச். எம். சீர்வை, டாக்டர்.ஜென்னிங்ஸ் மற்றும் பாசு போன்றவர்களின் அபிப்பிராயங்களும் முக்கிய ஆதாரங்களாக, இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு அமைந்தது.

5. இந்திய பாராளுமன்றம் மற்றும் சட்டசபையில் நிகழ்ந்த முக்கியமான வாதங்களும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு ஆதாரங்களாக உள்ளன.

6. 1935ம் வருட இந்திய அரசு சட்டம் தான் முக்கியமான மூலமாக அமைந்துள்ளது. ஏனெனில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பல சரத்துக்கள் இதிலிருந்து தான் பெறப்பட்டுள்ளது.

**7. அரசமைப்பு சட்ட வழக்கங்கள்: (Constitutional Conventions) :**

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐயர்லாந்து போன்ற நாடுகளின் அரசியலமைப்புச் சரத்துகளிலினின்றும் மேலும் முக்கியமாக இங்கிலாந்து நாட்டின் எழுதப்படா மரபு நெறிகள் அடங்கிய அரசியலமைப்பில் இருந்தும் பெறப்பட்டு, டாக்டர்.அம்பேத்கர் மற்றும் சில பெருந்தகைகளால் வரையப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் எழுதப்பட்ட அரசியலமைப்பு இடம் பெறவில்லை.நீதிமன்றங்களால், எழுதப்படா மரபு நெறிகளே சட்டங்களாக விளம்பப்பட்டும் மற்றும் காலம் காலமாக அது வழக்கத்தில் இருப்பதையும் அடிப்படையாகக் கொண்டே அந்நாட்டு அரசியலமைப்பு அமைந்துள்ளது.

இந்திய அரசியலமைப்பு, இங்கிலாந்தின் அரசியலமைப்பினைத் தழுவி அமைந்துள்ளதால், அந்நாட்டின் எழுதப்படா மரபுநெறிகளும் நமது அரசியலமைப்பு முறையில் இடம் பெற்றுள்ளன எனவே இங்கிலாந்து நாட்டு அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள எழுதப்படா மரபு நெறிகளும் நமது அரசியலமைப்பு பின்பற்றும் சில மரபுநெறிகள் பின்வருமாறு:



1. இங்கிலாந்து நாடு கொண்டிடும் அந்நாட்டு தலைவியான மகாராணியின்அலுவலகம் போன்றே இந்திய குடியரசுத் தலைவரின் அலுவலகமும் அமையப் பெற்றுள்ளது.

2. இங்கிலாந்து நாட்டின் மந்திரி சபையைப் போன்றதே நம்நாட்டு மந்திரி சபை அமைப்பும் ஆகும்.

3. பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் பிரதிபலிப்பாகவே நமது பிரதம மந்திரியும் விளங்குகிறார்.

4. இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற அமைப்பு முறையைத் தழுவியே இந்திய பாராளுமன்றமும் அமைந்துள்ளது.

5. இங்கிலாந்தைப் போன்றே நமது பாராளுமன்றமும், மக்களவை, மாநிலங்களவை என இரு அவைகளைக் கொண்ட ஈரவைச் சட்டமன்றமாக விளங்குகிறது.

6. இங்கிலாந்தின் பொதுச் சபையினைப் போன்றே நமது நாட்டு கீழவை—மக்களவை—யும் அதிக அதிகாரங்களைக் கொண்டே விளங்குகிறது.

7. இங்கிலாந்தினைப்போன்றே, மந்திரி சபையே பொறுப்பேற்க வேண்டும்.

8. இங்கிலாந்தினைப்போன்றே, மக்களவைத் தலைவர் சபாநாயகர் எனப்படுகிறார். இங்கிலாந்தின் சபாநாயகருக்குள்ள அதிகாரங்களைப் போன்றே நமது சபாநாயகரும் பெற்று விளங்குகிறார்.

9. இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சலுகைகள் யாவும் நமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

10. குடியரசுத் தலைவர் மரபு நெறிப்படி மந்திரி சபையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டவர்.

11. பணிமூப்பு உடைய நீதிபதியே தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுகிறார்.

12. மாநில சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மட்டுமே முறையே கலைக்கப்பட வேண்டும்.

## ஆ. இந்திய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள்:(முதன்மை நிலைமையுடைய அரசியலமைப்புச் சட்டம்)

**(BASIC FEATURES OF THE INDIAN CONSTITUTION) (SUPREMACY OF THE CONSTITUTION):**

இந்திய அரசியலமைப்பில், திருத்தத்திற்கு உட்படுத்த முடியாத சில அடிப்படை அம்சங்கள் உள்ளன. இது கோலக்நாத் மற்றும் கேசவானந்த பாரதி (Golaknath and Kesavananda & Bharti) போன்ற பிரபல வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டது.

**அடிப்படை அம்சங்கள் பின்வருமாறு:**
**(The following are the basic features)**

1. இந்திய அரசியலமைப்பின் உயர்தனித்தன்மை.

2. இந்திய அரசியலமைப்பின் சமய சார்பற்ற தன்மை

3. இந்திய அரசியலமைப்பின் மூன்று கிளைகளான சட்டமன்றம்,நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை இடையே அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.



4. குடியரசு மற்றும் மக்களாட்சி முறையான அரசாங்கம்.

5. இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி அமைப்பு.

6. இந்திரா காந்தி நேரு எதிர் ராஜ் நாராயண் வழக்கில், சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் என்ற கொள்கை இந்திய அரசியலமைப்பின் ஒரு அடிப்படை அம்சம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## இ. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிறப்பியல்புகள்:

**(SALIENT OUTSTANDING FEATURES OF THE INDIAN CONSTITUTION)**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பல சிறப்பியல்புகளைக் கொண்டு நீண்டதொரு சட்டமாக உலகத்தில் திகழ்கிறது. 443 சரத்துக்களையும் 12 அட்டவணைகளையும் உடையது. இதில் அடிப்படை உரிமைகள் மாநில நெறிபடுத்தும் கொள்கைகள்,நெருக்கடிநிலை ஆகியவற்றிற்கான சரத்துக்கள் உள்ளன.

2. அடிப்படை உரிமைகளானது, அமெரிக்காவின் அரசியலமைப்பு சட்டத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. பாராளுமன்ற முறையானது பிரிட்டிஷ் கூட்டரசிலிருந்து பெறப்பட்டுள்ளது.மாநில நெறியுறுத்தும் கொள்கைகள் அயர்லாந்திலிருந்தும் மற்றும் நெருக்கடிநிலை சரத்துக்கள் ஜெர்மனியிலிருந்தும் பெறப்பட்டு உள்ளது.

3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய மற்றும் மாநில அரசு அமைப்புக்கு வழிவகை செய்துள்ளது.

4. இதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சிறப்பு சரத்துக்கள் மற்றும் அரசாங்க மொழிக்கும் சிறப்பு சரத்துக்கள் உள்ளது.

5. இறையாண்மைகொண்ட மக்களாட்சிமுறை கொண்ட குடியரசினை இது நிறுவியுள்ளது. வேறு எந்த நாட்டவரின் கட்டுப்பாட்டிலும் இல்லாததால் இது இறையாண்மை கொண்டது என்றும் இதனை ஆளுகின்றவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் மக்களாட்சிமுறை கொண்டது என்றும் கருதப்படுகிறது. மேலும் குடியரசுத்தலைவர் மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

6. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் இறையாண்மையானது இந்திய மக்களிடம் உள்ளது. இந்திய மக்களே இந்நாட்டை ஆளுகின்றனர். இந்திய அரசியலமைப்பு சட்டமானது, அமெரிக்கா ஐக்கிய கூட்டரசு நாடுகளை போன்று தலைவர் முறையிலான அரசு அல்லாது, பாராளுமன்ற வகை அரசுக்கு வகை செய்துள்ளது. நாடாளுமன்றத்தில் மக்களவை மற்றும் மேலவை உள்ளன.

7. இந்திய அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்தும் நடைமுறையானது, கடினமாகவும் மற்றும் நெகிழ்வு தன்மையுடையதாகவும் உள்ளது. பல சரத்துக்கள் சாதாரண பெரும்பான்மையுடன் திருத்தப்படுகின்றன.

8. இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பாகம் 4ன்கீழ் அரசினை நெறிப்படுத்தும் கொள்கைகள் மாநிலத்தை ஆளுகின்றவர்களுக்கு நல்ல முறையில் ஆட்சிபுரிவதற்கு வழிகாட்டிகளாக உள்ளன.



9. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாகம் 3 ன் கீழ் பலவகை அடிப்படை உரிமைகள் தரப்பட்டுள்ளன.அரசியலமைப்பு சட்டத்தின்படி, நீதிப்பேராணை மூலம் பரிகாரங்களை பெற முடியும்.

10. இந்திய அரசியலமைப்பு சட்டமானது, வல்லமை பெற்ற மத்திய அரசைக் கொண்ட கூட்டாட்சி அமைப்பை உருவாக்குகிறது. சில சமயங்களில் இது தனி ஆட்சியாக ஆகிறது. உ—ம். நெருக்கடி நிலை காலத்தில் அல்லது தேசீய நலன் கருதி மத்திய அரசு வல்லமையுடையதாகிறது. இவ்வாறான தனி ஆட்சி மற்றும் கூட்டாட்சி முறையே அரசியலமைப்பின் முக்கிய அம்சமாகிறது.

11. இது சுதந்திரமான நீத்துறையை உருவாக்குகிறது. உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றம் இதன் வரம்புகள். இதில் உள்ள நீதிபதிகளின் தகுதிகள் பற்றி குறிப்பிடுகின்றது.

12. இது பழைய முறையாகிய ஜாதி பிரதிநிதித்துவத்தை அகற்றிவிட்டு, எல்லோருக்குமான வயதுவந்தோர் வாக்குரிமைகளை அறிமுகப்படுத்துகிறது. 21 வயது பூர்த்தியடைந்த ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு, பிரதிநிதியை தேர்ந்தெடுக்க உரிமையுண்டு.

13. இது நீதித் துறை மறுஆய்வுக்கு வகை செய்கிறது. இதன் மூலம் சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்துறை துஷ்பிரயோகத்தை தடை செய்கிறது.

14. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமயசார்பற்ற அரசை உருவாக்குகிறது. இது எந்த ஒரு மதத்தையோ அல்லது ஜாதியையோ ஆதரிக்கவில்லை. மதசுதந்திரம் முழுமையாக உள்ளது. எந்த ஒரு நபரும் தனக்கு விருப்பமுள்ள மதத்தை தழுவலாம். அவரது சமயசடங்குகளில் அரசு குறுக்கிடாது.

15. அமெரிக்க ஐக்கிய கூட்டரசு நாடுகளில் இரட்டை குடியுரிமை உள்ளது போலல்லாமல் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஒற்றை குடியுரிமைக்கு வகை செய்கிறது.

16. இந்திய அரசியலமைப்பு சட்டமானது, எல்லா அடிப்படை காரியங்களிலும் சீரான தன்மைக்கு வகை செய்கிறது. சீரான நீதித்துறை, சீரான உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டங்கள், மத்திய மாநிலத்திற்கான அகில இந்திய பொதுப் பணிகள் போன்றவைகளை இது உருவாக்குகிறது.

**ஈ. முடிவுரை :**

**(CONCLUSION):**

ஆஸ்டின் என்பவர் ‘‘இந்திய அரசியலமைப்பு சட்டமானது முதன்மையானதும், முதலாவதாகவும் உள்ள ஒரு சமூக ஆவணமாகும்’’ என்று கூறுகிறார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒரு மதச்சார்பற்ற அரசை உருவாக்குகிறது என ‘‘ஜவஹர்லால் நேரு’’ கூறுகிறார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது ஒரு கூட்டாட்சி போல்வு என ‘‘பேராசிரியர் வீயர்’’ கூறுகிறார்.



**பல்கலைக்கழக வினாக்கள்**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்ட மூலங்கள் யாவை? இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முக்கிய ஷரத்துக்களை வரையறுக்கவும்.

2. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தன்மைகளைக் குறிப்பிடவும்.

3. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியத் தன்மைகள் எவை? இந்தியா ஒரு கூட்டாட்சி அமைப்பா?(இவ்விடையுடன் இரண்டாம் பகுதியை இணைக்கவும்)

ஐ ஐ ஐ